**20.12.2022**

**அ.வ.எண். 194/2015**

**பி.சா.2 அஜீத்குமார் அவர்களின் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தம் என்று கோரி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து எங்களுக்கு சொந்தம் என்று கோரி நாங்கள் அ.வ.எண்.247/2015 தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கின் சொத்தின் விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் தாக்கல் செய்த வழக்கின் வழக்கு சொத்தின் விவரம் சர்வே எண் 1194/1பி மற்றும் 1194/2, விஸ்தீரணம் 7 செண்டு. அதன் ஜக்குபந்தி, கிழக்கு பக்கம் போரூரார் முதலியாரின் கழனி, வடக்கு பக்கம் கன்னியப்பன் மனை, மேற்கு பக்கம் ரோடு, தெற்கு பக்கம் கல்யாணி என்பவரின் நிலம் உள்ளது.

இந்த வழக்கின் தாவா சொத்து ஆதியில் 1ம் வாதியின் தாத்தா கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். நாராயணன் என்பவரின் மகன் பெயர் தேவராஜ் என்றால் சரிதான். தேவராஜ் என்பவருக்கு ராஜா, மாரி மற்றும் சந்திரன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். தேவராஜின் வாரிசுகள் தான் தாவா சொத்திற்கு உரிமை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

சரிதான். மேற்படி விவரங்கள் எனக்கு என் தகப்பனார் சொன்னதன் அடிப்படையில் தெரியும்.

நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.247/2015 ல் உள்ள வழக்கின் விவரங்களும் எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்களும் எனது தகப்பனார் சொன்னதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும் என்றால் நான் பிறப்பதற்கு முன்பு நடந்த விவரங்கள் எனது தகப்பனார் சொன்னதன் அடிப்படையில் தெரியும். எனக்கு கருத்து தெரிந்த பின்பு நடந்த விவரங்கள் எனக்கே தெரியும். எனவே இன்றைய தேதியிலிருந்து சுமார் 16 வருடத்திற்கு உட்பட்ட விவரங்கள் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2015ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தபிறகு வழக்கின் விவரங்கள் நான், எனது தகப்பனார், எனது அண்ணனும் வழக்கறிஞரிடம் கூறினோம். எனது தகப்பனாரை அ.வ.எண். 247/2015 ல் ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனது தகப்பனார் எனக்கும் எனது அண்ணனுக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் எனது தகப்பனாரை தரப்பினராக சேர்க்கவில்லை.

அ.வ.எண்.247/2015 ல் வழக்குரையில் தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ள விவரம் வழக்கறிஞரிடம் யார்

கூறியது என்றால் நாங்கள் மூவரும் கூறினோம். எதனடிப்படையில் எனது தகப்பனார் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்று நாங்கள் கூறுகிறோம் என்றால் எனது தகப்பனார் வாய்மொழியாக கிரையம் வாங்கி 20 வருடங்களாக அனுபவித்து வந்ததன் அடிப்படையில் அவருக்கு பட்டா வழங்கப்பட்டது. மேற்படி வாய்மொழி கிரையம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும் எனது தகப்பனார் சொல்லியதன் அடிப்படையில் தான் தெரியும் என்றாலும் சரிதான்.

நாங்கள் தாக்கல் செய்த வழக்கில் வாதுரையில் மேற்படி வாய்மொழி கிரையம் குறித்து ஏன் சொல்லவில்லை என்றால் அந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன், எனது அண்ணன் தான் கூறினார். எனவே வாய்மொழி கிரையம் குறித்து வாதுரையில் ஏன் சொல்லவில்லை என்று எனது அண்ணனை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி கிரையம் குறித்து எனது அண்ணனுக்கும் நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

எனது தகப்பனார் தாவா சொத்தினை 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார் என்று எனது வாதுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். ஆனால் நான் பிறந்தது முதல் அங்கு தான் வசித்து வந்தேன். தற்போது நாங்கள் தாவா

சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். எனது அக்கா இறந்தபிறகு பக்கத்து தெருவில் ஒரு வாடகை வீட்டில் இருக்கிறோம். 2019ம் வருடத்திலிருந்து நாங்கள் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறோம். தாவா சொத்திலுள்ள கூரைவீடு தற்போது குடியிருக்ககூடாத நிலையில் பாழாகிவிட்டது என்றால் சரிதான்.

எந்த வருடம் என் தகப்பனார் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா வந்தது என்று எனக்கு தெரியாது. நாராயணன் என்பவரின் வாரிசுகளிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக எனது தகப்பனார் எந்த கிரையமும் பெறவில்லை என்றால் சரிதான். எனவே நாராயணன் என்பவருக்கு உரிமையான சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் எனது தகப்பனார் கிரையப்பத்திரம் மூலமாக கிரையம் வாங்கியிருக்கலாம் அதனால் பட்டா வழங்கப்பட்டிருக்கலாம்.

நாராயணன் என்பவரின் வாரிசுகளிடமிருந்து என் தகப்பனார் கிரையப்பத்திரம் மூலமாக கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. வாய்மொழியாக கிரையம் வாங்கினார் என்று எனது தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். ஒருவேளை என் தகப்பனார் கிரையப்பத்திரம் மூலமாக கிரையம் வாங்காமலிருந்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் எனக்கு தெரியாது.

எனது தகப்பனார் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா சரியானதா இல்லை தவறானதா என்று அரசாங்கம் தான் முடிவு செய்யவேண்டுமா என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்படும் போது வாதிகளை விசாரணை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. பட்டா வழங்கும் போது வாதிகளை விசாரணை செய்திருந்தால் தாவா சொத்திற்கு அவர்கள் தான் உரிமையாளர்கள் என்று அரசாங்கத்திற்கு தெரியவந்திருக்கும் என்றால் வாதிகள் தாவா சொத்திற்கு உரிமையாளர்கள் இல்லை.

இன்றையதேதி வரை வாதிகளிடமிருந்து என் தகப்பனார் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. ராஜா, மாரி மற்றும் சந்திரன் ஆகியோர்களிடமிருந்து எனது தகப்பனார் வாய்மொழியாக கிரையம் வாங்கினார் என்ற விவரத்தினை சொல்லாமல் எனது தகப்பனார் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்ற விவரத்தினை மட்டும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான்.

பி.சா.ஆ.1 ல் எனது தகப்பனார், சந்திரன், மாரி மற்றும் ராஜாவிடமிருந்து கிரையம் வாங்கியதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். உண்மையிலேயே என் தகப்பனார் வாதிகளிடமிருந்து வாய்மொழியாக கிரையம் வாங்கியிருந்தால் அந்த விவரத்தினை எனது பிராதுவிலும், பி.சா.ஆ.1 லும் சொல்லியிருப்பார் என்றாலும்

அவ்வாறு கிரையம் வாங்காததால் தான் எந்த விவரத்தையும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் வாய்மொழியாக கிரையம் வாங்கினார் என்று வழக்கிற்காகவும், தாவா சொத்தினை வாதிகளிடமிருந்து அபகரிக்கவேண்டும் என்பதற்காகவும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கான பட்டா எனது பெயரில் வரவில்லை. பி.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் என் தகப்பனார் பி.சா.ஆ.1 எழுதி வைத்தார் என்றால் சரிதான். 20 ஆண்டுகளுக்கும் மேலாக என் தகப்பனார் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார் என்பதற்கு நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 20 வருடங்களுக்குமான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனடிப்படையில் நான் எனது வழக்கை நிருபிக்க தவறிவிட்டேன் என்றாலும் எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

பி.சா.ஆ.1 க்கு பின்பு தாவா சொத்தினை நானும், எனது அண்ணனும் அனுபவித்து வருகிறோம் என்பதை காண்பிப்பதற்கு நான் எந்தஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. தாவா சொத்திற்கும் ராஜாவிற்கும்

சம்பந்தமில்லை என்று எனது வழக்கில் நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்திற்கு உரிமையாளர் என்று எனது வழக்கில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

19.6.2015 அன்று 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் அவருடைய சொத்துடன் தாவா சொத்தினையும் அபகரிக்க முயற்சி செய்தார் என்று எனது பிராதுவில் நான் சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமையில்லை, ஆனால் அவர் முழுசொத்தையும் அபகரிக்க முயற்சி செய்கிறார். நான் தாக்கல் செய்த வழக்கின் பிராதுவில் இந்த வழக்கின் 1ம் வாதி மற்றும் நான் தாக்கல் செய்த வழக்கின் 2ம் பிரதிவாதி ராஜா தாவா சொத்தில் என்ன செய்தார் என்ற விவரத்தினை நான் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்த வழக்கில் 1ம் வாதி ராஜாவிற்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கிற்கு 1ம் வாதி ராஜா என்ன பதிலுரை தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் வாதி ராஜாவின் அனுமதியின் பேரில் தான் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் தாவா சொத்தில் குடிசை கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து தாவா சொத்தினை பார்வையிட்டால் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் தாவா சொத்தில் குடியிருக்கிறாரா இல்லையா என்று தெரியவரும் என்றால் சரிதான். 2.9.2010 அன்று தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்காக எனது தகப்பனார் வாதிகளிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் படி எனது தகப்பனார் கிரையப்பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை என்று வாதிகள் எனது தகப்பனாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எனது தகப்பனார் பெற்றுக்கொண்டு அதற்கு எந்த பதிலும் அனுப்பாததால் தான் வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல.

வாதிகளின் அனுமதியின் பேரில் நாங்கள் மற்றும் எங்கள் சித்தப்பா தாவா சொத்தில் கட்டியுள்ள குடிசையை அகற்றிதர கடமைபட்டவர் என்றாலும் வாதிகள் கோரியுள்ள படி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எங்கள் அனுபவத்தை காண்பிக்க எந்த ஆவணமும் நாங்கள் தாக்கல் செய்யாததால் நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.247/2015 தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான மின் இணைப்பு எனது தகப்பனார் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

வாதிகளிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதி வாங்காமல் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் நாங்கள் குடிசை போட்டுள்ளதால் அதை அகற்றிதர நாங்கள் கடமைபட்டவர் என்றாலும் எனதுதகப்பனார் எங்கள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லதக்கதல்ல என்றாலும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தம் என்பதால் வாதிகள் தாக்கல் செய்த இந்த வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றாலும் நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.247/2015 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.